# தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல) சட்டம் 1971

**Tamil Nadu Slum Areas (Improvement and clearance) Act, 1971, (11 of 1971)**

## குடிசை வாழ் மக்களுக்கு இச்சட்டம் சாதகமா? அல்லது பாதகமா?

## சட்டத்தின் தாக்கத்தைக் கண்டறியும் பகுப்பாய்வு

தொகுப்பு : நகரத்தில் வாழும் எளிய மக்களுக்கான தகவல் மற்றும் ஆதார மையம்

**Compiled by: Information and Resource Centre for the Deprived Urban Communities (IRCDUC)**

தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல் ) சட்டம், 1971

குடிசைவாழ் மக்களுக்கு இச்சட்டம் சாதகமா? அல்லது பாதகமா?

சட்டத்தின் தாக்கத்தைக் கண்டறியும் பகுப்பாய்வு

---

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தால் நிறுவப்பட்டது ஆகும். இவ்வாரியம் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும்" நோக்கத்தோடு 1971ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

- ஆனால், சட்டத்தில் "மேம்படுத்துதல்" எனக் குறிப்பிட்டுள்ள போதும், ஏன் வாரியத்தின் பெயரிலேயே இவ்வார்த்தை சேர்க்கப்படவில்லை?
- குடிசைப் பகுதிகளை "அகற்றி" மாற்று இடங்களுக்கு இடப் பெயர்வு செய்யும் பணி மட்டும் தான் இவ்வாரியத்தின் கடமையா?

இச்சட்டத்தின் அடிப்படைச் கருத்தமைவு என்னவெனில்

"குடிசைப் பகுதிகள் பொது சுகாதாரம் மற்றும் அப்பகுதிகளின் சுகாதாரத்திற்கும் அபாயம் விளைவிக்கக் கூடிய பகுதிகளே" ஆதலால் அரசாங்கம் குடிசைப் பகுதிகளின் "பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும். இப்பகுதிகளை மேம்படுத்தவும், அகற்றவும் முனைகிறது. இச்சட்டம் அரசின் இம்மூன்று செயல்பாடுகளைச் சட்ட ரீதியாக அங்கீகரிக்கின்றது. சட்டத்தில் குறிப்பிட்டுள்ள இம்மூன்று இச்செயல்பாடுகள் குடிசை

மக்களுக்கு வீட்டு வசதி மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகத் தீட்டப்பட்டுள்ளது என இச்சட்டம் தெரிவிக்கின்றது.

ஆனால், நடைமுறையில் என்ன நிகழ்கிறது? இச்சட்டம் குடிசைவாழ் மக்களுக்குச் சாதகமா? அல்லது பாதகமா?

1. தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971, இந்திய அரசியல் சாசனத்தில் காணப்படும் அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் (பாகம் IV, பிரிவு47) வலியுறுத்தப்படும் "பொது சுகாதாரத்தை" மையமாகக் கொண்டுள்ளது.

குடிசை மக்களின் பிரச்சினைகள் பொது சுகாதாரத்தை மட்டும் சார்ந்தது அன்று. சமூக மற்றும் பொருளாதார ரீதியில் நலிவடைந்த மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தையும் மையமாகக் கொண்டதாகும். எனவே இச்சட்டத்தின் நோக்கம் பொது சுகாதாரத்தை மட்டும் மையமாகக் கொள்ளாமல், சமத்துவ மற்றும் சுதந்திர உரிமைகளையும் சட்ட ரீதியாக உள்ளடக்க வேண்டும்.

2. குடிசை மக்களின் "மேம்பாட்டிற்கான" இச்சட்டம் குடிசைப் பகுதிகளை எவ்வாறு வரையறுக்கிறது?

இச்சட்டத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் காணப்படும் குடிசைப் பகுதிகளின் வரையறை: "எந்தவொரு பகுதி தாழ்வான இடங்களில் சுகாதாரமற்று, இழிநிலையில், நெரிசலாகத் தென்பட்டு, பொதுமக்களுக்கும், அவ்விடங்களில் வசிக்கும் மக்களுக்கும் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் இதர

வசதிக்கும் அபாயகரமாகிறதோ அப்பகுதியை குடிசைப் பகுதியாக அரசு அறிவிக்கலாம்."

- ஏன் இந்தச் சட்டம் இத்தகைய அவதூறான விளக்கத்தை அளிக்கிறது?
- எந்தவகையில் குடிசைவாழ்மக்கள், பொது மக்களின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கிறார்கள்?
- இம்மக்கள் வாழும் இடங்கள் இழிநிலையில் காணப்படுகிறது என, அரசாங்கம் இவர்களின் மாண்பிற்கு களங்கம் விளைவிக்கும் வகையில் எவ்வாறு சட்டம் வகுக்கலாம்?

3. இச்சட்டத்தின் முக்கியமான செயல்பாடுகளில், குடிசைப் பகுதிகளிலுள்ள கட்டிடங்களைப் பதிவு செய்தலும் ஒன்றாகும். அத்தியாயம் 3, பகுதி 4ன்படி, "குடிசைப் பகுதிகளில் வசிக்கும் கட்டிடத்தின் உரிமையாளர்கள் அல்லது வாடகைதாரர்கள் எல்லா கட்டிடங்களையும் பதிவு செய்வதற்கானப் படிவங்களை நிரப்பி தொடர்புடைய அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது.

இந்நிலையில், 31 மார்ச் 2014ல் மத்திய கணக்கு மற்றும் தணிக்கை அதிகாரியின் தணிக்கை அறிக்கையின்படி " தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் மாற்று வாரியத்திடம் கட்டிடங்களின் பதிவு தொடர்புடைய ஆவணங்கள் பராமரிக்கப்படவில்லை" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கைக்குப் பதிலளித்த வாரிய உயரதிகாரிகள், வாரியத்திற்கு அதற்கேற்ற நிதி ஆதாரம்

மற்றும் மனிதவளம் இல்லையெனத் தெரிவித்துள்ளனர் இதற்கு முக்கியக் காரணம் என்னவெனில்,

அ) குடிசை மக்களின் சட்ட உரிமையை வலியுறுத்தும் இச்சட்டத்தின் தமிழாக்கம் குடிசை மாற்று வாரியத்தின் இணைய தளத்திலோ அல்லது வாரியத்தின் மக்கள் சாசனத்திலோ இல்லை.

ஆ) இச்சட்டத்தை குடிசைவாழ் மக்களுக்குச் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் வாரியத்தால் செயல்படுத்தப்பட வில்லை.

இ) இத்தகையச் செயல்பாடுகளைச் செய்யக்கூடிய குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சமுதாய மேம்பாட்டுப் பிரிவு இதனைச் செய்வதில்லை. ஏனெனில், இப்பிரிவு குடிசை மக்கள் கணக்கெடுப்பு, வாழ்வாதார மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் இதர விழிப்புணர்வு பணிகளை மட்டும் தான் செய்கிறது. குடிசைப் பகுதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, போதுமான மனிதவளம் மற்றும் நிதி ஒதுக்கீடு போன்றவை இப்பிரிவுக்கு இல்லை.

சமுதாய மேம்பாட்டுப் பிரிவு மற்றும் இதன் அலுவலர்களின் கடமைகளை இச்சட்டம் விவரிக்கவில்லை.

4. தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டம், 1971ன் முக்கியச் செயல்பாடுகளில் "குடிசைப்பகுதிகளை அறிவித்தல்" என்ற ஒன்றும் உள்ளடங்கும். இச்சட்டத்தின் படி குடிசைப் பகுதிகளை இரண்டு வகைகளில் குடிசை மாற்று வாரியம் அறிவிக்கலாம்.

I) குடிசைப் பகுதியாக அறிவித்தல் - இச்சட்டத்தின் பகுதி 3-ன் படி, குடிசைப் பகுதிகளை வாரியம் "குடிசைப் பகுதி" என அறிவிக்கலாம். என குறிப்பிடுகிறது.

II) குடிசைப் பகுதிகளை "அகற்றக்கூடிய இடங்கள்" என அறிவித்தல் - பகுதி 11ன்படி "வாரியம் அல்லது சார்ந்த அரசுத்துறைகள் அல்லது உள்ளூர் நிர்வாகம் அல்லது மாநில வீட்டு வசதி வாரியத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பேரில், குடிசைப் பகுதிகளை "அகற்றக் கூடிய இடங்கள்" என வாரியம் அறிவிக்கலாம். அவ்வாறு அகற்றக்கூடிய இடம் என, ஒரு குடிசைப்பகுதியை அறிவிக்கும் முன், அரசு அவ்விடத்தில் வசிக்கும் வீடுகள், மற்றும் கட்டிடங்களின் உரிமையாளர்களுக்கு அழைப்புவிடுத்து, தாங்கள் ஏன் இந்த இடத்தை "அகற்றக்கூடிய இடமாக" அறிவிக்கக் கூடாது? என மக்கள் கருத்தினை முறையாகப் பெற வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றிய பின்பு தான் அப்பகுதியினை "அகற்றக்கூடிய இடம்" என அறிவிக்கலாம் என்று இச்சட்டம் விளக்குகிறது.

ஆனால், மத்திய கணக்கு மற்றும் தணிக்கை அதிகாரியின் 2014ஆம் ஆண்டில் வெளிவந்த தணிக்கை அறிக்கையின் படி "தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் மாற்று வாரியம்" அது தொடங்கப்பட்ட ஆண்டில் இருந்து இதுவரை எந்தவொரு குடிசைப் பகுதியையும் "அகற்றக்கூடிய இடங்கள்" என்னும் பிரிவின் கீழ் அறிவிக்க வில்லை.

- இந்நிலையில் எதனடிப்படையில் வாரியம் இதுவரை குடிசைப்பகுதிகளை அகற்றியுள்ளது?
- சட்டத்தில் இடம் பெற்றுள்ள விதிமுறைகளைச் செயல்படுத்தாமல் எவ்வாறு குடிசைப் பகுதிகளை அகற்றலாம்?

எனவே, இதுவரை குடிசைப் பகுதிளை அகற்றிய செயல்பாடுகள் சட்ட விரோதமான ஒன்றாகும்.

குடிசைமாற்று வாரியத்தின் முக்கிய கடமைகளின் ஒன்றான "குடிசைப் பகுதிகளை அறிவிக்கும் பணியில் வாரியம் எவ்வாறு செயல்பட்டிருக்கின்றது? "ராஜீவ் ஆவாஸ் யோஜனா" வின் கீழ் 2012-2013ஆம் ஆண்டு நடைபெற்ற கணக்கெடுப்பு ஆவணங்களில் காணப்படும் "அறிவிப்பு" தொடர்பான தகவலின் தொகுப்பு கீழே

| நகரத்தின் பெயர் | அறிவிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளின் சதவிகிதம் | அறிவிக்கப்படாத குடிசைப் பகுதிகளின் சதவிகிதம் |
|---|---|---|
| ஈரோடு | 56% | 44% |
| சேலம் | 0% | 100% |
| திருச்சி | 54% | 46% |
| திருநெல்வேலி | 54% | 46% |
| தூத்துக்குடி | 13% | 87% |
| மதுரை | 19% | 81% |

சென்னை, கோவை, திருப்பூர், வேலூர் ஆகிய 4 நகரங்களின் தகவல்கள் ஆவணங்களில் காணப்பட வில்லை.

சேலத்தில் ஒரு குடிசைப் பகுதியைக் கூட வாரியம் "குடிசைப் பகுதி" என இதுவரை அறிவிக்கவில்லை.

தூத்துக்குடியிலுள்ள 63 வளர்ச்சி யடைந்த குடிசைப் பகுதிகளில் 1பகுதி மட்டும் தான் அறிவிக்கப்பட்டுள்ளது

*2014ஆம் ஆண்டின் மத்திய கணக்கு மற்றும் தணிக்கை அதிகாரியின் அறிக்கையின்படி "தமிழ்நாடு அரசு 1971ஆம் ஆண்டில் 1202 குடிசைப்பகுதிகளை அங்கீகரித்துள்ளது. 1985ல் 17 குடிசைப்பகுதிகளை அறிவித்துள்ளது. அதன்பின் எந்தவொரு குடிசைப் பகுதியையும் அரசு அறிவிக்கவில்லை. தமிழகத்திலுள்ள 2,364 குடிசைப் பகுதிகளில் 1,156 பகுதிகள் மட்டும் தான் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 49% குடிசைப் பகுதிகள் இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை.*

*குடிசை மாற்று வாரியம் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளைச் செய்யத் தவறியுள்ளது ஏன்?*

*2015ம் ஆண்டில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு குடிசைமாற்று வாரியம் பின்வருமாறு பதிலளித்துள்ளது.*

*கேள்வி:* *74வது அரசியல் சாசனத்திருத்தச் சட்டம் அமலானபின் குடிசைப் பகுதிகளை அறிவிப்பது குடிசை மாற்று வாரியத்தின் பணியா? மாநகராட்சியின் பணியா?*

*பதில் :* *தற்போது குடிசை மாற்று வாரியம் குடிசைப் பகுதிகளை அறிவிக்கும் பணியைச் செய்யவில்லை.*

*தட்டிக் கழிக்கும் பணிதான் குடிசை மாற்று வாரியத்தின் பணியா?*

5. தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் 7வது அத்தியாயம் குடிசைவாழ் மக்களை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தும் செயலிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது.

பிரிவு 29ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள்

அ) குறிப்பிடப்பட்டுள்ள அரசுத்துறை/ அதிகாரியின் எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்துதல் கூடாது.

ஆ) குறிப்பிடப்பட்டுள்ள அரசுத்துறை/அதிகாரி சம்மந்தப்பட்ட மக்களின் கருத்துகளைக் கேட்டு விசாரணை நடத்தியபின்பே, எழுத்துப்பூர்வமாக அப்புறப்படுத்துதலுக்கு அனுமதி அளிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியும்.

இ) அப்புறப்படுத்துதலை நிராகரிக்க, குறிப்பிடப்பட்டுள்ள அரசுத்துறை/ அதிகாரி மாற்று குடியிருப்பு மற்றும் அப்புறப்படுத்தும் செயல் குடிசைவாழ் மக்களின் மேம்பாட்டிற்கா எனும் காரணியைக் கண்டறிந்த பின்னர் அப்புறப்படுத்துதலுக்கு அனுமதி நிராகரிக்கலாம்.

ஈ) குடிசைப் பகுதியை அப்புறப்படுத்த வேண்டுமெனில் அப்பகுதி குடிசைப்பகுதியாகவோ அல்லது குடிசைகளை அகற்றக்கூடிய பகுதியாகவோ சட்ட ரீதியாக அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சட்ட ரீதியாக அறிவிக்கப்படாத பல இடங்களை குடிசை மாற்று வாரியம் அப்புறப்படுத்தியுள்ளது. மக்களின் கருத்தினைக் கண்டறியாமலும், விசாரணை செய்யாமலும், எந்தவித எழுத்துப் பூர்வமான அறிவிப்பும் இன்றியும் பலகுடிசைப் பகுதிகளை அகற்றியுள்ளது.

6. தமிழக அரசு, தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்துக்கப்பாலுள்ள சொற்களைப் பயன்படுத்துகிறது. மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்தின்படி குடிசைப் பகுதிகளை இருவகைகளாக மட்டுமே பிரிக்க முடியும். அதாவது குடிசைப் பகுதிகள் என அறிவிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடிசைகளை அப்புறப்படுத்தக் கூடிய பகுதிகள்.

ஆனால், தமிழக அரசின் ஆவணங்கள் குடிசைப் பகுதிகளைப் பல வகையாக பிரிக்கிறது. வளர்ச்சியடைந்த பகுதிகள், வளர்ச்சியடையாத பகுதிகள், ஆட்சேபனைக்குரிய பகுதிகள், ஆட்சேபனை இல்லாத பகுதிகள், வசிக்கக்கூடிய பகுதிகள், வசிக்கவியலாத பகுதிகள். என வரையறைப்படுத்தியுள்ளது. இவையனைத்தையும் கொள்கை ஆவணங்களில் பார்க்கலாம். இவ்வரையறைகளின் படிதான் குடிசைப் பகுதிகளை அப்புறப்படுத்துகிறார்கள்.

சட்டத்திற்குப் புறம்பான இவ்வரையறைகளை எவ்வாறு பயன்படுத்தலாம்?

"ராஜீவ் ஆவாஸ் யோஜனா" வின் குடிசையில்லா நகரங்களை உருவாக்கும் திட்ட ஆவணங்களிலும் இவ்வரையறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| நகரத்தின் பெயர் | வசிக்கக்கூடிய குடிசைப் பகுதிகள் | வசிக்க இயலாத குடிசைப் பகுதிகள் | ஓரளவு வசிக்கக் கூடிய குடிசைப் பகுதிகள் | வளர்ச்சியடைந்த குடிசைப் பகுதிகள் |
|---|---|---|---|---|
| சென்னை | 896 | 235 | - | 787 |
| கோவை | 116 | 99 | - | 44 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஈரோடு | 54 | 36 | - | 5 |
| மதுரை | 176 | 23 | 1 | 126 |
| சேலம் | 207 | 39 | - | - |
| திருச்சி | 155 | 109 | - | 64 |
| திருநெல்வேலி | 114 | 4 | 6 | - |
| தூத்துக்குடி | 72 | 28 | - | 63 |
| திருப்பூர் | 46 | 46 | - | 2 |
| வேலூர் | 66 | 57 | - | 58 |
| மொத்தம் | 1902 | 676 | 7 | 1149 |

- புதுப்புது வரையறைகள், சட்டத்திருத்தம் இல்லாமல் எவ்வாறு தோன்றின?
- இவை சட்ட ரீதியான வரையறைகளா?
- எவ்வாறு இவ்வரையறைகளின் அடிப்படையில் குடிசை மாற்று வாரியம் செயல் திட்டங்களை வகுக்கிறது?

7. குடிசைவாழ் மக்களின் பிரச்சனைகளில் வீட்டு வசதி, நிலவுரிமை மற்றும் வாழ்வாதார உரிமை ஆகியவை இன்றியமையாதன ஆகும். ஆனால், இம்மக்களுக்காக வகுக்கப்பட்ட இச்சட்டத்தில் இம்மூன்றிற்கான பிரிவுகள் இல்லை. இவற்றை உள்ளடக்கச் சட்டத்திருத்தங்கள் இன்றியமையாதனவாகும்.

*8. குடிசை மாற்று இடங்கள் இதுவரை சென்னையில் மட்டும் 32,452 வீடுகள் மாற்றிடங்களில் கட்டப்பட்டுள்ளன. ஆனால் மறுவாழ்வு மற்றும் மீள் குடியேற்றத்திற்கான சட்டமோ, கொள்கையோ இன்றி, மக்களை அவர்கள் வசிக்கும் இடத்திலிருந்து 20 முதல் 30 கிலோ மீட்டர் தொலைவில் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தி நவீன தீண்டாமையை வலியுறுத்தும் வகையில் புறநகர்ச் சேரியில் மக்களை வாழச் செய்கிறது. தற்போது தமிழகத்தில் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் செயல்பாடுகள் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு திட்டத்திற்கும் ஏற்ப உள்ளது.*

*இவற்றில் சீரான செயல்பாடுகள் இல்லாததால் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.*

*2010ம் ஆண்டில் தமிழக அரசின் உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தை மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்திற்கான வழிகாட்டலை வகுக்க அரசு வலியுறுத்தியுள்ளது. ஆனால், இன்றுவரை அத்தகைய வழிகாட்டலை குடிசை மாற்று வாரியம் வகுக்கமால் இருப்பது ஏன்?*

*9. நகரத்தில் வாழும் எளிய மக்களுக்கான இச்சட்டம், சாலை வாழ் மக்கள், அமைப்பு சாரா தொழிலாளிகள், புலம் பெயர்ந்த மக்கள் மற்றும் இதர நலிவடைந்த மக்களுக்கான உரிமைகளை உள்ளடக்கவில்லை. இம்மக்களின் உரிமைகளை உள்ளடக்கவும் சட்டத்திருத்தம் தேவை.*

குடிசைவாழ் மக்களுக்கான இச்சட்டம் அவர்களுக்குச் சாதகமானதே! ஆனால், இச்சட்டத்தை வலுவடையச் செய்ய வேண்டிய செயல்பாடுகளில் தமிழக அரசு ஈடுபட வேண்டும்.

<u>எங்களின் கோரிக்கைகள்</u>

1. தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் மாற்று வாரியம் இச்சட்டத்தின்படி நடத்தல் வேண்டும். இச்சட்டத்திலுள்ள செயல்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.

2. சட்டத்தில் மக்களுக்குண்டான உரிமைகளை நிலை நாட்டும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டும். இதில் வீட்டு வசதி, முழுமையான நில உரிமை மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் சட்டத்திருத்தம் அமைய வேண்டும்.

3. மத்திய வீட்டு வசதி மற்றும் நகர் வாழ்மக்களின் ஏழ்மையைப் போக்கும் துறையின் தகவல்படி, சென்னையிலுள்ள எல்லாகுடிசை வாழ்மக்களுக்கும் சென்னையிலேயே வீடுகட்டிக் கொடுக்க நகரத்தில் 2.43 % நிலம் இருந்தால் போதும் என தெரிவித்துள்ளது. ஆனால் தமிழக அரசு மக்களை நகரத்திலிருந்து ஏன் வெளியேற்றுகிறது? 2.43 % நிலம் கூட மக்களுக்குக் கிடையாதா?

" ராஜீவ் ஆவாஸ்யோஜனா" கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் 6 நகரங்களில் 40 %க்கும் மேலான தலித் மக்கள் வாழ்கிறார்கள். இம்மக்களுக்கு 2.43% நிலம் ஒதுக்குவது அரசுக்கு ஏன் இயல வில்லை. தலித் மக்களை அவர்களின் வசிப்பிடங்களிலிருந்து அப்புறப்படுத்தி நவீன சேரிகளில் வசிக்க வற்புறுத்துவது நவீன தீண்டாமையே!

ஆதலால், மக்களுக்கு சென்னையில் அவர்கள் வசிக்கும் பகுதிகளில் நில ஒதுக்கீடு செய்யும் வகையில் இச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டிய அவசியமுள்ளது.

4. இந்நாள்வரை வாரியத்தால் வீடு கட்டிக் கொடுத்த மக்களுக்கு, அவ்வீடுகளின் மேல் முழுஉரிமை அளித்தல் வேண்டும். நிபந்தனை ஒதுக்கீடு அளிப்பதைத் தவிர்த்து முழுஉரிமையளித்தல் வேண்டும்.

5. குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா அளித்தல் வேண்டும்.

6. குடிசைப் பகுதி மாற்றுவாரியம், குடிசை வாழ் மக்களின் மாண்பினைப் பாதுகாக்கும் வகையில் செயல்பட சட்டத்தில் வலியுறுத்த வேண்டும்.

7. சட்டத்திலுள்ள செயல்பாட்டை வாரியம் மீறினால் தகுந்த தண்டனை வழங்கச் சட்டத் திருத்தம் இன்றியமையாதது.

8. 74வது அரசியல் சாசனத்திருத்தச் சட்டம் அமலான பின் வாரியத்தின் கடமைகள் மற்றும் மாநகராட்சிகளின் கடமைகள் எவையெனத் தெளிவுபடுத்த வேண்டும்.

9. குடிசைவாழ் மக்களின் பங்கேற்பு இவ்வாரியத்தின் செயல்பாடுகளில் இருக்கும் வகையில் சட்டத்திருத்தம் தேவை.

10. குடிசைவாழ் மக்களின் சமத்துவ மற்றும் சுதந்திர உரிமைகளையும் சட்ட ரீதியாக உள்ளடக்க வேண்டும்.

மேலும், "குடிசைகள் கடவுளால் உருவானவையல்ல" மக்களின் அறியாமையினாலேயே உருவானவை. இதனால் குடிசைகளை அறிவுப்பூர்வமான திட்டம் மற்றும் அதிரடி செயற்பாட்டின் வழியாக அப்புறப்படுத்தலாம். (1995ஆம் ஆண்டின் குடிசை மாற்று வாரியத்தின் கணக்கெடுப்பு ஆவணம், பக்கம் 120)" என்னும் வாரியத்தின் கண்ணோட்டத்தை மாற்ற சட்டத்திருத்தம் கொண்டு வந்து மக்களின் மாண்பினைக் பாதுகாப்பது தமிழக அரசின் கடமை!